**தலைப்பு 322 – தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

தலைப்பு – 322 தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 யூன் 23 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 637.32 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 634.65 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 2.67 மில்லியன் அதாவது 0.42 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| மீண்டெழுபவை | 349.52 | 348.73 | 0.79 | 0.23 |
| மூலதனம் | 287.80 | 285.92 | 1.88 | 0.65 |
| மொத்தம் | 637.32 | 634.65 | 2.67 | 0.42 |

## 2.2 வருமானக் கணக்கு

### மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்

திணைக்களத்தினால் 2016 ஆம் ஆண்டிற்காக ஒரு வருமானக் குறியீட்டிற்காக கூட்டுமொத்தமாக ரூபா 675.00 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது கூட்டுமொத்தமாக ரூபா 747.85 மில்லியன் வருமானமொன்று சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 110.79 சதவீதமாக இருந்தது.

## 2.3 முற்பணக் கணக்கு

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 32201 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 19.00 | 18.99 | 13.00 | 17.55 | 82.00 | 58.66 |

## 2.4 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 7002/0000/00/0405/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 11.36 மில்லியனாக இருந்தது.

## 2.5 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 04 பொது வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 39.82 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0002/0087/000 | 3.69 |
| 6000/0000/00/0013/0057/000 | 4.49 |
| 6000/0000/00/0016/0039/000 | 31.36 |
| 6000/0000/00/0018/0049/000 | 0.28 |
| மொத்தம் | 39.82 |

## 2.6 கணக்காய்வு அவதானிப்பு

தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

திணைக்களத்தினால் 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பேணப்பட வேண்டிய நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### பாதீட்டு முரண்

ஒரு மூலதன செலவின விடயத்திற்காக மிகை நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டதன் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ரூபா 1.55 மில்லியன் அதாவது தேறிய நிதி ஏற்பாட்டில் 12 சதவீதமாகக் காணப்பட்டது.

### 3.3 பொது வைப்புக் கணக்கு

02 வருடங்களை விஞ்சிய ரூபா 3,091,028 கூட்டுத்தொகையான 15 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

32201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 351,729 ஆக இருந்ததுடன் அந்நிலுவை மீதிகள் 01 ஆண்டிலிருந்து 11 ஆண்டுகள் வரையான காலவீச்சினைக் கொண்டிருந்தும் அந்நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

திணைக்களத்தின் ஹக்கல தாவரவியல் பூங்காவிற்குரிய பெறுமதி மதிப்பீடு செய்யப்படாத 69 ஹெக்டேயர் காணியில் 97 குடும்பங்களினால் 30 வருடங்களுக்கு

மேற்பட்ட காலமாக அனுமதியற்ற வகையில் பிடித்து வைக்கப்பட்டிருந்ததுடன் அச் சொத்துக்களை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

திணைக்களத்தால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்திற்குக் குறைவான காலமாக கொண்டுவரப்படுகின்ற தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 3,862,280 ஆக இருந்தது.

**3.6 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்ளுடனான இணங்காமைகள்**

02 அரசாங்க விடுதிகளில் 05 வருடங்கள் மற்றும் 07 வருட காலமாக வாழ்ந்து வருகின்ற உத்தியோகத்தர்களிடமிருந்து தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.4 ஆம் பிரிவின் பிரகாரம் குறைவான சம்பளம் பெறுகின்ற வாழ்க்கைத் துணையின் சம்பளத்திலிருந்து அறவிட வேண்டிய ரூபா 94,974 தொகை அதாவது 5 சதவீத் தொகை அறவிடப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

**3.7 செயலாற்றல்**

2016 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினதும் செயல்நடவடிக்கைத் திட்டத்தினதும் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

அருகிச் செல்லும் தாவர உயிரினங்களைப் பாதுகாத்தல் மற்றும் பரவச்செய்தல் தாவரவியல் பூங்காத் திணைக்களத்தின் பிரதான நோக்கமாக இருந்த போதிலும் விஷேடமாக 15 தாவர உயிரினங்கள் பல வருடகாலமாக அருகிச் செல்லும் அச்சுறுத்தலுக்கும் அருகிச் செல்லும் ஆபத்திற்கும் உள்ளாகியிருந்தது. அந்த விஷேட தாவரங்களை பரவச் செய்வதற்காக போதியளவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மலர்ப் பயிர்ச் செய்கைப் பிரிவில் மரபணுசெய்யப்பட்ட அந்துாரியக் கன்றுகளின் வருடாந்த இலக்கு 25,000 கன்றுகளாக இருந்த போதிலும், அதில் 17,048 கன்றுகள் அதாவது 68 சதவீதம் மாத்திரம் அடையக் கூடியதாக இருந்தது.

(ii) வெற்று ஜேம்போத்தலொன்றில் 15 கன்றுகளும், 750 மி.லீற்றர் வெற்றுப் போத்தலொன்றால் 25 கன்றுகளும் பெறக்கூடியதாக இருந்த போதிலும், மரமணுப் பிரிவின் மூலம் கன்றுகளாக விநியோகிக்கப்பட்ட மரமணுக்குட்படுத்தப்பட்ட அந்துாரியப் போத்தல்களின் எண்ணிக்கையையும் உற்பத்தி செய்யப்பட்ட கன்றுகளின் எண்ணிக்கையையும் ஒப்பீடு செய்த போது ஒரு போத்தலில் ஒரு கன்று மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது.

**3.8 முகாமைத்துவ பலவீனங்கள்**

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் முகாமைத்துவ பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நாரஹேன்பிட்ட உதவிப் பணிப்பாளர் அலுவலகத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட 05 பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு நாளொன்றிற்கு 24 மணித்தியாலம் வீதம் தொடர்ச்சியாக மாதத்திற்கு 08 நாட்கள் அல்லது 09 நாட்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஆ) சீத்தாவக்க தாவரவியல் பூங்காவின் திட்டத்தின் பிரகாரம் நுளையும் வீதியின் அருகில் சிற்றுண்டிச் சாலையும் தகவல் நிலையமும் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் போது அந்த சிற்றுண்டிச்சாலை நிர்மாணிக்கப்பட்டு ஒரு வருடம் செல்வதற்கு முன் இன்னுமொரு இடத்தில் ரூபா 2,163,642 தொகை செலவில் புதிய சிற்றுண்டிச்சாலையொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(இ) இலங்கையில் எந்தவொரு நிறுவனத்தாலும் நடாத்தப்படாத மலர்ப் பயிர்ச் செய்கை மற்றும் தாவரவியல் அழகுபடுத்துதல் விடயங்களுக்குரிய டிப்ளோமா பாடநெறியொன்றை நடாத்துதல் காலத்தின் தேவையாக இனங்காணப்பட்டு தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களம் அதற்காக 2010 ஆம் ஆண்டின் போது பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும், அப்பாடநெறியை ஆரம்பித்து நடாத்திச் செல்வதற்கு முடியாதிருந்தது.

**3.9 மனித வள முகாமைத்துவம்**

---

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

---

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 33 | 14 | 19 |
| (ii) | மூன்றாம் நிலை | 10 | 05 | 05 |
| (iii) | இரண்டாம் நிலை | 186 | 135 | 51 |
| (iv) | ஆரம்ப நிலை | 556 | 494 | 62 |
| | மொத்தம் | 785 | 648 | 137 |